

முன்னாள் விழுப்புரம் நகர மன்ற உறுப்பினர் எஸ்.டி.குமார் மறைந்தார் என்பதை அறிந்த உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி நேரில் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் லெனின் விஜய், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, நகர மன்ற உறுப்பினர்கள் செல்வம் பிரேம், சகாய பிரவீனா, சசி, குமார், கார்த்தி, பெர்னாட் ராஜ், ஜான்போஸ்கோ, வழக்கறிஞர் ஜோ, ராயர் மற்றும் பலர் அஞ்சலி செலுத்தினர்.

## இந்தியாவில் தொடர்ந்து குறைந்து வரும் கொரோனா பாதிப்பு!

புதுடெல்லி, மே 30 -

இந்தியாவில் கொரோனா பாதிப்பு நேற்று முன்தினம் 425 ஆக இருந்த நிலையில் நேற்று 403 ஆக குறைந்துள்ளது.

இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 கோடியே 49 லட்சத்து 89 ஆயிரத்து 744 ஆக உயர்ந்துள்ளது.

தொற்று பாதிப்பில் இருந்து நேற்று முன்தினம் 685 பேர் உள்பட இதுவரை 4 கோடியே 44 லட்சத்து 52 ஆயிரத்து 908 பேர் குணமடைந்துள்ளனர். தற்போது தொற்று பாதிப்புடன் சிகிச்சை பெற்று வருவோர் எண்ணிக்கை 4,972 ஆக சரிந்துள்ளது.

### புல்லட் ரயில்களுக்கு இணையான ரயில் சேவை

## இந்தியாவிலும் பயன்பாட்டுக்கு வரவேண்டும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**டோக்கியோ, மே 30-**

**ஒசாகாவிலிருந்து டோக்கியோ நகருக்கு புல்லட் இரயில் மூலம் புறப்பட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதுகுறித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

ஒசாகா நகரிலிருந்து டோக்கியோவுக்கு புல்லட் இரயிலில் பயணம் செய்கிறேன். ஏறத்தாழ 500 கி.மீ தூரத்தை இரண்டரை மணிநேரத்திற்குள் அடைந்துவிடுவோம்.

உருவமைப்பில் மட்டுமல்லாமல் வேகத்திலும் தரத்திலும் புல்லட் ரயில்களுக்கு இணையான இரயில் சேவை நமது இந்தியாவிலும் பயன்பாட்டுக்கு வர வேண்டும்; ஏழை எளிய நடுத்தர மக்கள் பயனடைந்து, அவர்களது பயணங்கள் எளிதாக வேண்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும் இளைஞர் அணி சார்பில்

## திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்!

### கே.ஆர்.என் இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், மே. 30



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் மாநில இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கு இணங்க இளைஞர் அணி சார்பில் நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும் நாளை (31.05.2023) முதல் 02.06.2023 வரை ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெறும் கூட்டங்களின் விவரம்.

ஒன்றியம், நகரம், பேரூர்களில் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசும் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் விபரங்கள்

நாளை (31.05.2023) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நாமக்கல் கிழக்கு நகரம் கொசவம்பட்டி 4 ரோடு மற்றும் மாலை 5.00 மணிக்கு சின்ன முதலைப்பட்டி 4 ரோடு ஆகிய இடங்களிலும், மாலை 6.00 மணிக்கு நாமக்கல் மேற்கு நகரம் நல்லிபாளையம் பேருந்து நிறுத்தம், மாலை 7.00 மணிக்கு சேலம் ரோடு முருகன் கோவில் பேருந்து நிறுத்தம் ஆகிய இடங்களிலும் தலைமைக் கழகப் பேச்சாளர் கனல். இராம.சுப்ரமணி,

நாளை (31.05.2023) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நாமக்கல் தெற்கு நகரம் ரமேஷ் தியேட்டர் 4 ரோடு, மாலை 5.00 மணிக்கு உழவர் சந்தை எதிரில் தலைமைக் கழகப் பேச்சாளர் செந்தூர் பாலகிருஷ்ணன்,

நாளை (31.05.2023) புதன்கிழமை 4.00 மணிக்கு புதுச்சத்திரம் வடக்கு ஒன்றியம் நாட்டாமங்கலம் பகுதி மற்றும் மாலை 5.00 மணிக்கு பாச்சல் மெயின் ரோடு பகுதி, மாலை 6.00 மணிக்கு புதுசத்திரம் தெற்கு ஒன்றியம் சார்பில் செல்லப்பம்பட்டி பேருந்து நிறுத்தம், மாலை 7.00 மணிக்கு ஏளூர் பேருந்து நிறுத்தம் பகுதியிலும் தலைமைக் கழகப் பேச்சாளர் கோவை. கி.துரைமுருகன்,

வரும் 31.05.2023 (புதன்கிழமை) 4.00 மணிக்கு எருமப்பட்டி ஒன்றியம் பவித்திரம், மாலை 5.00 மணிக்கு எருமப்பட்டி ஒன்றியம் அலங்காநத்தம் பிரிவு, மாலை 6.00 மணிக்கு எருமப்பட்டி பேரூர் எருமப்பட்டி கைக்காட்டி, மாலை 7.00 மணிக்கு எருமப்பட்டி பேருந்துநிலையம், மாரியம்மன் கோயில் அருகில் ஆகிய இடங்களிலும் தலைமைக் கழகப் பேச்சாளர் நாமக்கல் இராஜகோபால்,

நாளை (31.05.2023) புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு சேந்தமங்கலம் பேரூர் 11 வது வார்டு சின்ன தேர் நிலையம் அருகில், மாலை 7.00 மணிக்கு அரசமரம் தினசரி மார்க்கெட் அருகில் தலைமைக் கழகப் பேச்சாளர் செந்தூர் பாலகிருஷ்ணன்,

நாளை (31.05.2023) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு இராசிபுரம் நகரம் பழைய பேருந்து நிலையம், கடைவீதி மற்றும் மாலை 5.00 மணிக்கு விஜயலட்சுமி தியேட்டர் அருகிலும், மாலை 6.00 மணிக்கு பட்டணம் பேரூர் பட்டணம் பேருந்து நிறுத்தம் 12 வது வார்டு, மாலை 7.00 மணிக்கு பட்டணம் பேரூர் பிள்ளையார் கோவில் அருகில் 13 வது வார்டு ஆகிய இடங்களில் தலைமைக் கழகப் பேச்சாளர் ஒசூர் அப்துல் ரகுமான்,

வரும் 01.06.2023 (வியாழக்கிழமை) மாலை 5.00 மணிக்கு நாமக்கல் ஒன்றியம் வள்ளிபுரம் மெயின் ரோடு, மாலை 6.30 மணிக்கு வகுரம்பட்டி ஆண்டவர் பங்க் ஆகிய இடங்களில் தலைமைக் கழகப் பேச்சாளர் கனல்.இராம.சுப்ரமணி,

வரும் 01.06.2023 (வியாழக்கிழமை) மாலை 4.00 மணிக்கு இராசிபுரம் ஒன்றியம் கூனவேலம்பட்டி, மாலை 5.00 மணிக்கு சிங்களாந்தபுரம், மாலை 4.00 மணிக்கு பிள்ளாநல்லூர் பேரூர் பாவடி மைதானம் 14 வது வார்டு, மாலை 5.00 மணிக்கு பிள்ளாநல்லூர் பேருந்துநிறுத்தம் 5 வது வார்டு ஆகிய இடங்களில் தலைமைக் கழகப் பேச்சாளர் கோவை. கி. துரைமுருகன்,

வரும் 02.06.2023 (வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு மோகனூர் ஒன்றியம் அணியாபுரம் - நான்கு ரோடு, மாலை 5.00 மணிக்கு புதுப்பட்டி - ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில், மாலை 6.00 மணிக்கு மோகனூர் பேரூர் மோகனூர் அண்ணாசிலை அருகில் 12வது வார்டு, மாலை 7.00 மணிக்கு வாங்கல் 4 ரோடு 7 வது வார்டு ஆகிய இடங்களில் தலைமைக் கழகப் பேச்சாளர் கனல்.இராம. சுப்ரமணி,

வரும் 02.06.2023 (வெள்ளிக்கிழமை) மாலை 4.30 மணிக்கு சேந்தமங்கலம் ஒன்றியம் வெட்டுக்காடு, மாலை 5.30 மணிக்கு துத்திக்குளம், மாலை 6.30 மணிக்கு காளப்பநாயக்கன்பட்டி பேரூர் வ.உ.சி. திடல் அருகில் 9வது வார்டு, மாலை 7.30 மணிக்கு நஞ்சுண்டாபுரம் 10 வது வார்டு ஆகிய இடங்களில் தலைமைக் கழகப் பேச்சாளர் கோவை. கி. துரைமுருகன்,

வரும் 02.06.2023 (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு கொல்லிமலை ஒன்றியம் செம்மேடு பேருந்துநிறுத்தம், மாலை 3.00 மணிக்கு செங்கரை பேருந்துநிறுத்தம் ஆகிய இடங்களில் தலைமைக் கழகப் பேச்சாளர் ஒசூர் அப்துல் ரகுமான்,

வரும் 02.06.2023 (வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு சீராப்பள்ளி பேரூர் சின்னகாக்காவேரி 1 மற்றும் 2 வது வார்டு, மாலை 5.00 மணிக்கு ஒடுவன்குறிச்சி பேருந்து நிறுத்தம் 6, 7 மற்றும் 11 வது வார்டு, மாலை 6.00 மணிக்கு இரா.புதுப்பட்டி பேரூர் புதுப்பட்டி பேருந்து நிறுத்தம் (8 வது வார்டு), மாலை 7.00 மணிக்கு ஆர்.ஆர்.காட்டூர் மெயின் ரோடு 14வது வார்டு ஆகிய இடங்களில் தலைமைக் கழகப் பேச்சாளர் நாமக்கல் இராஜகோபால்,

வரும் 02.06.2023 (வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு நாமகிரிப்பேட்டை ஒன்றியம் முள்ளுக்குறிச்சி மாலை 5.00 மணிக்கு ஆயில்பட்டி, மாலை 6.00 மணிக்கு நாமகிரிப்பேட்டை பேரூர் வெள்ளக்கல்பட்டி 1வது வார்டு, மாலை 7.00 மணிக்கு அரியாகவுண்டம்பட்டி மாரியம்மன் கோயில் அருகில் 9 வது வார்டு ஆகிய இடங்களில் தலைமைக் கழகப் பேச்சாளர் கந்திலி கரிகாலன்,

வரும் 02.06.2023 (வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு வெண்ணந்தூர் ஒன்றியம் புதுப்பாளையம், மாலை 5.00 மணிக்கு நெ.3 கொமாரபாளையம், மாலை 6.00 மணிக்கு வெண்ணந்தூர் பேரூர் காமராஜர் சிலை அருகில் 6வது வார்டு, மாலை 7.00 மணிக்கு அண்ணாசிலைஅருகில் 4வது வார்டு ஆகிய இடங்களில் தலைமைக் கழகப் பேச்சாளர் சேலம் சுஜாதா,

வரும் 02.06.2023 (வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு அத்தனூர் பேரூர் அத்தனூர் அண்ணாசிலை (10வது வார்டு), மாலை 5.00 மணிக்கு ஆயிப்பாளையம் (4வது வார்டு) ஆகிய இடங்களில் தலைமைக் கழகப் பேச்சாளர் செந்தூர் பாலகிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

மேற்கண்ட அனைத்து தெருமுனை பிரச்சாரக் கூட்டங்களிலும் நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அவர் அவர்களுக்கு உட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர் கழகங்களில், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெறும் கூட்டங்களில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், சார்புஅணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், வார்டு கழகச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொது மக்கள் என அனைவரும் தவறாது கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என் இராஜேஸ்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஜூன் 3ம் தேதி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள்

## மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடிட வேண்டும்!

### மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிக்கை!

நாகை, மே.30 -



மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது-

தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலில் 13 முறை போட்டியிட்டு 13 முறையும் வெற்றிப் பெற்று 19 ஆண்டு காலம் 5 முறை தமிழக முதல்வர், சட்ட மன்றத்தில் 50 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி சாதனை நாயகர் கலைஞர் அவர்கள் 50 ஆண்டுகாலம் கழகத் தலைவர், பல இந்திய குடியரசு தலைவர்கள், பிரதமர்களை தேர்ந்து எடுத்து, இந்திய துணை கண்டத்திற்கே வழி காட்டியாக, 60 ஆண்டுகாலம் திரைப்படத்துறை, பத்திரிக்கை துறை, , இலக்கியம் , நாடகம், சொற்பொழிவு என தொட்ட அனைத்து துறைகளிலும் சிகரமாக உயர்ந்து நின்ற 80 ஆண்டு காலம் பொதுவாழ்க்கைக்கு சொந்தக்காரர், ஒரு நூற்றாண்டு கால திராவிட இயக்க வரலாற்றில் முதன்மையாளராக விளங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சி காலத்தில் இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் ஆட்சி செய்த கலைஞர் அவர்கள் தமிழ் மொழியை செம்மொழியாக்கி, காவிரி நடுவர் மன்றம் அமைத்தும், தனியார் பேருந்துகளை அரசுடமையாக்கி அரசு போக்குவரத்து கழகத்தை உருவாக்கியவர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், குடி நீர் வடிகால் வாரியம், பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லம், கை ரிஷா ஒழிப்பு, ஒதுக்கப்பட்டவர்கள், ஏழை எளியவர்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள், 12ம் வகுப்பு வரை இலவச கல்வி உருவாக்கியது, குடும்பத்தில் முதல் பட்டதாரிக்கு கல்வி செலவை அரசே ஏற்கும், தமிழ்நாட்டில் முதன் முதலில் விவசாய கல்லூரி கோவையில் தொடங்கியது, மீனவர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டம், சொத்தில் பெண்களுக்கு சம உரிமை, ஏழை பெண்களுக்கு இலவச திருமண உதவி திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், கர்ப்பிணி பெண்களுக்கு நிதி உதவி திட்டம், மகளிர் சுய உதவி குழு அமைத்தது, அனைத்து கிராம பகுதியிலும், கான்கிரீட் சாலை அமைத்தல், மாணவர்களுக்கு இலவச பேருந்து, தமிழகம் முழுவதும் சமத்துவபுரம் அமைத்தது, சமச்சீர் கல்வியை கொண்டு வந்தது என எண்ணற்ற திட்டங்களை தனது ஆட்சியில் கொண்டு வந்து தமிழக மக்களின் ஏற்றத்திற்கு உழைத்திட்ட நமது நெஞ்சமெல்லாம் நிறைந்து வாழ்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை வரும் ஜூன் 3ம் தேதி (3.6.2023) முதல் ஓராண்டுக்கு கலைஞர் நூற்றாண்டு விழாவை மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள அனைத்து கிளைகள், வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா எழுதுப்பொருட்களை வழங்கியும், ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், முதியோர், ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு உணவு, உடை வழங்கியும், மரக்கன்றுகள் நட்டும், வழங்கியும், இரத்ததான முகாம், மருத்துவ முகாம்கள் நடத்தியும், பொதுக்கூட்டம், தெருமுனை பிரச்சார கூட்டம் ஆகியவற்றை நடத்தி சிறப்பாக கொண்டாடுவது என்றும், இந் நிகழ்ச்சியில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளு மன்ற உறுப்பினர் சட்ட மன்ற உறுப்பினர்கள்,, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி தலைவர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், ஒன்றியக் குழு தலைவர்கள், நகர் மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் தங்கள் பகுதியில் நடைபெறும் கலைஞர் பிறந்த நாள், நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விழாவை சிறப்பாக கொண்டாடிட வேண்டும். மேலும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் தங்கள் பகுதியில் உள்ள கிளை, வார்டுக் கழகச் செயலாளருக்கு கலைஞர் பிறந்த நாள் மற்றும் நூற்றாண்டு விழா அனைத்து பகுதியிலும் சிறப்பாக கொண்டாடிட உரிய ஆலோசனைகளை வழங்கிட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

திருச்சி வடக்கு மாவட்டம், துறையூர் மத்திய ஒன்றியம், நரசிங்கபுரம் ஊராட்சியைச் சேர்ந்த மகேஸ்வரன், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 28.5.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.





தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து புதியதாக நீட்டிக்கப்பட்ட 3 வழித்தட பேருந்துகளின் சேவையை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கொடியசைத்து துவக்கி வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி,சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி,எஸ்.பி.வெங்கடேஸ்வரன்,முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.ஜி.சேகர்,நல்லம்பள்ளி துணை சேர்மன் பெரியண்ணன்,மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன்,மற்றும் போக்குவரத்து துறை அலுவலர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.


**19-ம் ஆண்டு நினைவு அஞ்சலி**




திருமதி. கமலா அரங்கநாதன்
நினைவு தினம் 16–05–2004
திரு. மு. அரங்கநாதன் Ex. M.L.A.
நினைவு தினம் 30–05–2004
என்றும் உங்கள் ஆசீர்வாதத்துடன்
The Graphic Design Shop & Cuckoo Garden
அலுவலக ஊழியர்கள்,
சென்னை – 14 Mob: +91 94440 74706


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாகை அ. அம்பலவாணன்

### மே 30 (2020)



**கழகம் துவக்கப்பட்ட 1949ஆம் ஆண்டே முத்தமிழறிஞர் கலைஞரை அழைத்து, நாகை, ஆழியூரில் பொதுக்கூட்டம் நடத்தியவர். 1961–ல் சிக்கலில் கிளைக் கழகத்தை இவர் உருவாக்கியபோது, பேரறிஞர் அண்ணா அவர்களே நேரடியாக கிளை அலுவலகம் வந்து, கிளை குறிப்பேட்டில் கையொப்பமிட்டு சென்றார்.**

**கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், நாகை மாவட்டச் செயலாளர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரது அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர்.**

**தஞ்சை மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவராக பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**2017ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' வழங்கப்பட்டது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**